செய்தி வெளியீடு எண். 245 நாள்: 11.05.2018

**திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து பள்ளி வாகனங்களை ஆய்வுக்கு உட்படுத்தி சான்றுகளை 31.05.2018-க்குள் பெற்று சாலைகளில் இயக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கோடைக்கால விடுமுறையில் குறிப்பாக 'மே' மாதத்தில், அனைத்து பள்ளி நிர்வாகிகளும் தங்களிடம் உள்ள அனைத்து பள்ளி வாகனங்களையும், தங்களின் பள்ளி எல்லைக்குட்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலரிடம், ஆய்வுக்கு உட்படுத்தி, சான்றுகள் பெறப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளி வாகனங்களை ஒழுங்கு மற்றும் கட்டுப்படுத்துதல்) சிறப்பு விதிகள் 2012-ன் படியும், சென்னை போக்குவரத்து ஆணையர் அவர்களின் ஆணையின்படியும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் தலைமையில், 1) வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் திருவள்ளூர், செங்குன்றம், பூந்தமல்லி, அம்பத்தூர், 2) காவல்துறை துணை கண்காணிப்பாளர், 3) முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் 4) மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழு அலுவலர்களால், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி வாகனங்களும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி நிர்வாகிகளும், தங்கள் பள்ளி வாகனங்களை தயார்படுத்தி, அறிவிக்கப்படும் பொது இடங்களில், அந்தந்த வட்டார போக்குவரத்து அலுவலர்களால் அறிவிக்கப்படும் நாட்களில் தங்களது பள்ளி வாகனங்களை ஆய்வுக்கு உட்படுத்தி, அதற்கான சான்று பெறப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். அவ்வாறு சான்று பெறாத பள்ளி வாகனங்கள், 31.05.2018-க்குப் பின்னர், பொது சாலையில் இயக்க அனுமதிக்கப்படமாட்டாது.

31.05.2018-க்குப் பின்னர், ஆய்வுச்சான்று பெறாமல், பொதுச்சாலையில் இயக்கப்படும் பள்ளி வாகனங்கள் சிறைபிடிக்கப்பட்டு அவ்வாகனங்களின் அனுமதிச்சீட்டு இரத்து செய்யப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்காள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**